# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:67** **தேதி:20.09.2015**

## JTO தேர்வு விதி திருத்தங்களுக்கு இயக்குனர் குழு ஒப்புதல் மற்றும் சில செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

18.09.2015 அன்று நடைபெற்ற இயக்குனர் குழுக் கூட்டத்தில் JTO RR திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. **இந்த திருத்தங்கள் மூலமாக தேர்வு எழுதுவதற்கான சேவைக்காலம் 7 ஆண்டுகளிருந்து 5 ஆண்டுகளாக குறைக்கப்படும். ஒரு கட்ட தீர்வாக OFFICIATING JTOக்கள் அனைவரும் நிரந்தர JTOக்களாக பணியமர்த்தப் படுவார்கள்.** ஒரு வருட காலமாக இந்த பிரச்சனை இயக்குனர் குழுவின் தீர்விற்காக காத்திருந்தது. நமது மத்திய சங்கம் தொடர்ச்சியாக நமது CMD உள்ளிட்ட இயக்குனர்கள் பலரையும் சந்தித்து வற்புறுத்தி வந்தனர். இறுதியாக நமது மத்திய சங்கம் 08.09.2015 அன்று கூட DIRECTOR(HR) அவர்களை சந்தித்து விவாதித்து இருந்தது. இறுதியாக புதிய விதிகள் ஒப்புதல் பெறப்பட்டு விட்டது. வாழ்த்துக்கள்.

**PLI குழுக்கூட்டம்**:- 31.08.2015 அன்று நடைபெற்ற கூட்டத்தின் முடிவில் ஊழியர் தரப்பு தலைவர்கள் பண்டிகைக் காலம் வெகு விரைவில் நெருங்குவதால் குறுகிய கால இடைவெளியில் PLI கமிட்டியின் கூட்டங்களை நடத்தி விரைவில் இறுதி செய்ய வேண்டும் என கோரினர். BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் விடுப்பில் செல்வதால் இது தாமதப்பட்டு விடக்கூடாது என அந்தக் கமிட்டியின் உறுப்பினராக தோழர் ஸ்வபன் அவர்களையும் நமது மத்திய சங்கம் தெரிவித்து இருந்தது. ஆனால் நிர்வாகம் இதில் போதிய அக்கறை காட்டவில்லை என்பதை சுட்டிக்காட்டி உடனடியாக கூட்டம் கூட்டப்பட வேண்டும் என நமது மத்திய சங்க தலைவர்கள் SR.GM(SR) திரு ஷமீம் அக்தர் அவர்களை மீண்டும் 17.09.2015 அன்று சந்தித்து வற்புறுத்தினார்கள். அவரும் அந்தக் கூட்டத்தை விரைவில் கூட்ட உறுதி அளித்துள்ளார்.

**GM(ESTT) அவர்களுடன் சந்திப்பு:-** நமது அகில இந்திய தலைவர் தோழர் பல்பீர்சிங், பொறுப்பு பொது செயலாளர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி மற்றும் உதவி பொது செயலாளர் தோழர் M.C.பாலகிருஷ்ணா ஆகியோர் 18.09.2015 அன்று GM(ESTT) திருமதி மது அரோரா அவர்களை சந்தித்து கீழ் கண்ட பிரச்சனைகளை விவாதித்தனர்:-

- RM, Gr.D மற்றும் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள ஊதிய தேக்க நிலை.
- டெலிகாம் மெகானிக் தேர்விற்கான 10ஆம் வகுப்பு தகுதியை தளர்த்துவது.
- NEPP ஒப்பந்தத்தை சரியாக அமுல்படுத்துவது.

மேற்கண்ட பிரச்சனைகளில் மனித வள இயக்குனரை தொழிற்சங்கத்தின் சார்பாக சந்தித்த பின், கார்ப்பரேட் அலுவலகத்தில் இந்த பிரச்சனைகள் மீதான பணிகள் நடைபெற்று வருவதாகவும், அடுத்த கூட்டத்தில் இவற்றிற்கான பதிலை தருவதாகவும் GM(ESTT) தெரிவித்தார்.

**மத்திய பிரதேச தலைமை பொது மேலாளருக்கு ஒரு சபாஷ்:-** மத்திய பிரதேச மாநில தலைமை பொது மேலாளர் Dr.கணேஷ் சந்திர பாண்டே அவர்கள் ஊழியர் பிரச்சனைகளில் ஒரு பாராட்டத்தக்க முயற்சியை மேற்கொண்டுள்ளார். அந்த மாநிலத்தில் கடந்த மூன்று நான்கு மாதங்களாக பல மருத்துவ பில்கள் தீர்வு காணப்படாமல் தேங்கி கிடந்தன. அனைத்து மாவட்ட பொது மேலாளர்களையும் செப்டம்பர் 30ஆம் தேதிக்குள் அனைத்து மருத்துவ பில்களையும் SETTLE செய்ய வேண்டும் என உத்தரவு பிறப்பித்து உள்ளார். அதற்கு பின்னர் தீர்வு காணப்பட வேண்டிய மருத்துவ பில்களை தீர்வு காண அக்டோபர் 17ஆம் தேதி போபால் CGM அலுவலகத்தில் “மருத்துவ அதாலத்” ஒன்றிற்கு அறிவிப்பு கொடுத்துள்ளார். ஊழியர் பிரச்சனையில் மத்திய பிரதேச தலைமை பொது மேலாளர் எடுக்கும் அக்கறையினை BSNL ஊழியர் சங்கம் பாராட்டுவதோடு இதர மாநில தலைமை பொது மேலாளர்களும் இது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என விரும்புகிறது.

**வேலையின்மையின் கோர முகம்:-** உத்தரபிரதேச மாநிலத்தில் நான்காம் பிரிவு ஊழியர்களுக்கான பணியெடுப்பிற்கான விளம்பரம், அந்த அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது. அந்த விளம்பரத்திற்கான விண்ணப்பித்தவர்களின் விவரங்கள்:-

| | |
|---|---|
| மொத்த காலியிடங்கள் | :- 368(**முன்னூற்றி அறுபத்தெட்டு மட்டும்**) |
| வந்த மொத்த விண்ணப்பங்கள் | :- **23 லட்சம்** |
| அதில் பட்டதாரிகள் | :- 1.5 லட்சம் |
| முது நிலை பட்டதாரிகள் | :- 25 ஆயிரம் |
| Ph.D. பட்டம் பெற்றவர்கள் | :- 255 |
| ENGINEERING பட்டம் பெற்றவர்கள் | :- 2.22 லட்சம் |

**இந்த பணிக்கு தகுதியான 5ஆம் வகுப்பு தேறியவர்கள் : 53,426 பேர் மட்டும்.**

ENGINEERING பட்டம் பெற்ற ஒரு விண்ணப்பதாரரிடம் இது தொடர்பாக கேட்ட போது “இப்போது நாட்டில் வேலை ஏதும் இல்லை. இந்த சிக்கலான சூழ்நிலையில், வேலை ஏதும் இல்லாமல் இருப்பதை விட ஏதாவது வேலையில் இருப்பது நல்லது தானே” என்று நொந்துக் கொள்கிறார். **உண்மையில் இதுவே புதிய தாராளமய பொருளாதார கொள்கையின் நிதர்சனம்!**

வாழ்த்துக்களுடன்

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**

**மாநில செயலாளர்.**